# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 02.08.2019 | 1) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்– ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Implementation of Smart Energy Efficency Project through Caper model with conversion of all type of existing street light lamps (FTL,FCL,TS,SVL,MVL,MHL and High mast MHI lamps) into Efficient LED lamps and installation of ESM equipments for saving energy with fixing accessories for development in the corporation area of Thoothukudi City Municipal Corporation பணிக்காக ரூ. 14,00,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 17.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை மட்டும் திறக்கப்பட்டது.<br><br>1. M/s. Dowell Associates Keelkatalai Chennai<br>2.M/s. Kumaran Industries, Chennai<br>3.M/s. Lighting Technology India Pvt. ltd. Bangalore.<br><br>மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் மட்டும் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன்அடிப்படையில் தீர்மான எண். 245 நாள் 02.07.2019ல் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டது.<br><br>1. M/s. Kumaran Industries, Chennai<br>2. M/s. Dowell Associates Keelkatalai Chennai<br><br>மேற்படி தொழில்நுட்ப தகுதிபெற்ற இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் 08.07.2019ஆம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வழங்கப்பட்ட விலைவிகிதம் வருமாறு.<br><br>1. M/s. Kumaran Industries, Chennai<br>மதிப்பீட்டை விட 3.90% அதிகம் (ரூ. 12,36,53,250.00)<br>2. M/s. Dowell Associates Keelkatalai Chennai<br><br>மதிப்பீட்டை விட 13.60% அதிகம் (ரூ. 13,52,02,695.00)<br>இதில் வரிசை எண்.1 நிறுவனத்தார் மதிப்பீட்டை விட 3.90 %சதவீதம் | 145) அலுவலகக் குறிப்பு 1 2 மற்றும் 3 அனுமதிக் கப்பட்டது.. |

அதிகமாக வழங்கப்பட்டுள்ளதன் பேரில் மேற்படி L1 நிறுவனத்தாரிடம் 15.07.2019 அன்று விலை குறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில் அந்நிறுவனத்தார் 30.07.2019ஆம் தேதியன்று விலைகுறைப்பு கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் விகிதம் வருமாறு L1 விலை விகித ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 3.12 %அதிகம் ஆகும்.

1. M/s. Kumaran Industries, Chennai
   மதிப்பீட்டை விட 3.12% அதிகம் (ரூ. 12,27,25,689.00)
2. M/s. Dowell Associates Keelkatalai Chennai
   மதிப்பீட்டை விட 13.60% அதிகம் (ரூ. 13,52,02,695.00)

M/s. Kumaran Industries, நிறுவனத்தின் விலை குறைப்பு ஒப்புந்தப்புள்ளியானது மதிப்பீட்டை விட 3.12% (ரூ. 12,27,25,689.00) அதிகம் ஆகும். மேலும் பொறியியல் கையேடு பிரிவு 11 விதி எண். 2.7.2ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5% வரை மாமன்றம் அனுமதிக்க அதிகாரம் வழங்கி குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி L1 விலை விகித ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 3.12%மட்டுமே அதிகமாக வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி ஒப்பந்தப் புள்ளியை ஸ்மார்ட் சிட்டி திட்ட பணியில் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1.ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.மதிப்பீட்டை விட 3.12% அதிகமாக கொடுத்த M/s. Kumaran Industries Chennai ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

3.இப்பணியில் மதிப்பீட்டை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தொகையை மாநகராட்சி பொது நிதி (அ) ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/3209/2015 (SL-CAPEX)

| | | |
|---|---|---|
| | **2)**தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் பாளையங்கோட்டை ரோடு, வ.உ.சி. கல்லூரி அருகில் வார்டு–சி, பிளாக்–54, நகரளவு எண்.3ல் அ பதிவேட்டில் Reserved Forest என வகைப்படுத் தப்பட்டுள்ளது. பிற்காலத்தில் சர்வே ஆவணங்களில் ஜி.ஆர். நத்தம் மற்றும் நல்ல தண்ணீர் கால்வாய் கன்டினிட்டி கால்வாய் என குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது மேற்படி இடத்தில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பூங்கா பணிகள் நடைப்பெற்று வருகிறது. மேற்படி பூங்கா அமையும் இடமானது நகரளவு ஆவணங்களின் படி கன்டினிட்டி கால்வாய் என வகைபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி புலமானது திறந்த நீர் வெளி கால்வாயாக அல்லாமல் பூமிக்கு அடியில் செங்களால் கட்டப்பட்ட சேம்பர் மூலம் கோரம்பள்ளம் குளத்திலிருந்து நீர்வரத்து பண்டைய காலம் முதல் பயன்படுத்தப்பட்டு வந்தது. சுமார் 88 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தூத்துக்குடி மாநகராட்சியின் அனுபவத்திலும், பயன்பாட்டிலும் இருந்து வருகிறது. மேற்படி கால்வாய் தூர்ந்து போனதால் 1932ம் ஆண்டுக்கு பின்னர் பைப்லைன் 1 முதல் 4 வரை குடிநீர் விநியோகம் நான்கு வழி தடங்களில் பயன்படுத்தி வந்தது. அதில் 1, 2 மற்றும் 3 ஆகிய பைப் லைன் பயன்படாத நிலையில் உள்ளது. இதில் தற்போது நான்காவது பைப் லைன் மட்டும் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையில் தாமிரபரணி ஆற்றிலிருந்து தூத்துக்குடி மாநகரம் வரை திறந்த வெளி கால்வாய் அல்லாமல் மூடிய நிலையில் பயன்பாட்டில் உள்ளது.<br><br>மேற்படி இடம் தற்போது சீர்மிகு நகர திட்டத்தில் **(Smart City Scheme)** போக்குவரத்து பூங்கா, அறிவியல் பூங்கா , பரினாம வளர்ச்சி பூங்கா பொது மக்கள் பயன்பாட்டிற்கு செயல் திறன் விளக்க பூங்காவாகவும் மாணவர்களின் அறிவு திறன் வளர்ச்சிக்காகவும் தொலைநோக்கு பார்வையுடன் அமைக்கப்பட்டு வருகிறது.<br><br>எனவே மேற்படி கன்டினிட்டி கால்வாய் என உள்ளதை நில அளவை பதிவுகளிலிருந்து ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி என்ற பெயருக்கு நிலவகைப்பாடு மாற்றம் செய்ய மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைக்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3209/2015/இ1 மே.ம. | **146)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 3) தூத்துக்குடி மாநகராட்சியில் துப்புரவு பணி மேற்கொள்ள வெளிகொணர்வு முறையில் துப்புரவு பணியாளர்களை நிரப்பிக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 24100/பி3/ நாள் 31.10.2017ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது பணி ஓய்வு மற்றும் இறப்பின் காரணமாக ஜுலை 2019ல் 188 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். எனவே தற்போது குறைந்துள்ள பணியாளர்களையும் சேர்த்து 111 துப்புரவுப் பணியாளர்களை சுய உதவிக் குழு மூலம் பணியமர்த்தவும்.<br>மேலும் மேற்படி பணியாளர்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படும் போது மறு சுழற்சி செய்ய இயலாத இதர கழிவுகளையும் வணிகப்பகுதி மற்றும் பிரதான சாலைகளில் இருந்து உருவாகும் கழிவுகளை தருவைகுளம் கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்ல போதிய வாகனங்கள் இம்மாநகராட்சியில் இல்லாததால் வாடகை விகிதத்தில் மேற்கு மண்டலம் – 2 கிழக்கு மண்டலம் – 2 வடக்கு மண்டலம் – 1 என மொத்தம் 5 ரிக்டர்களை நாள் வாடகைக்கு பயன்படுத்திக்கொள்ளவும் அதற்கான செலவுத் தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். எச்3/2275/18 | 147) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 02.08.2019